செ.வெ.எண்: 680 நாள்: 04.11.2024

# புதுக்கோட்டை மாவட்டம்

## வீட்டில் இருந்த படியே செல்போன் மூலம் பம்பு செட்டுகளை இயக்கும் கருவிக்கு மானியம் -

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் செல்போன் மூலமாக விவசாய பம்பு செட்டுகளை இயக்கும் கருவி மானியத்தில் வழங்கப்படுகிறது. விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்.

விவசாயிகள் இரவு நேரங்கள் மற்றும் மழைக்காலங்களில் வயல்வெளிகளில் உள்ள பம்பு செட்டுகளை இயக்க செல்கிறார்கள். அவ்வாறு செல்லும் போது பாம்புக்கடி, விஷப்புச்சிக்கடி உள்ளிட்ட பிரச்சனைகளை சந்திக்க நேரிடுகிறது. இதை தவிர்க்கும் வகையில் தங்களது பம்பு செட்டுகளை வீடுகளில் இருந்தபடியே இயக்கும் கருவி மானியத்தில் வழங்கப்படுகிறது. இதன் மூலம் விவசாய நிலங்களில் உள்ள கிணறுகளில் அமைக்கப்பட்டுள்ள பம்பு செட்டுகளை தொலைவில் இருந்து செல்போன் மூலம் இயக்கவும், நிறுத்தவும் உதவுகிறது.

இதற்காக ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு மொத்த செலவில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.7 ஆயிரமும், மற்ற விவசாயிகளுக்கு மொத்த செலவில் 40 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.5 ஆயிரம் வழங்கப்படும். புதுக்கோட்டை மாவட்டத்தில் 86 பம்புசெட்டுகளுக்கு இந்த கருவி அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### பழைய மின்மோட்டாரை மாற்றி புதிய மின்மோட்டார் வாங்குவதற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு மானியம்:

பழைய மின்மோட்டாரை மாற்றி புதிய மின்மோட்டாரை வாங்குவதற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு மட்டும் அதிக பட்சமாக ரூ.15 ஆயிரம் மானியம் வழங்கப்படும். நுண்ணீர்பாசன அமைப்பு அவசியமாகும்.

### தரிசு நிலங்களில் சிறுதானிய சாகுபடிக்கு உழவு மானியம் வழங்கும் திட்டம்:

தரிசு நிலங்களில் சிறு தானிய சாகுபடிக்கு உழவு மானியமாக அதிகபட்சமாக ஹெக்டேருக்கு ரூ.5400/- மானியம் வழங்கப்படும்.

### சூரிய சக்தி மின்வேலி அமைத்தல்:

வேளாண்மை உற்பத்தியினை பாதுகாத்திடவும் காட்டு விலங்குகளிடமிருந்து பயிர் சேதத்தினை தடுத்திடவும் 2024-2025-ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளிடமிருந்து சூரிய மின்சக்தி வேலி அமைப்பதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

**வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டம்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2024-25ஆம் நிதி ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டத்தில் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளை தனிப்பட்ட விவசாயிகள் மானியத்தில் பெற்று பயன்பெறும் வகையில் 93 எண்களுக்கு ரூ.111.45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் சிறு குறு தாழ்த்தப்பட்ட பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம், இதர விவசாயிகளுக்கு 40 சதவீதம் மானியம் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச மானியம் இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. இதனில் ஆதிதிராவிடர் சிறு குறு விவசாயிகளுக்கு 20% கூடுதல் மானியம் வழங்கப்படுகிறது. இதர விவசாயிகளுக்கு பவர்வீடர் கருவிகள் 10% கூடுதல் மானியம் வழங்கப்படுகிறது.

**சூரிய சக்தி மின்மோட்டார் (PMKUSUM) வழங்கி நிறுவுதல் திட்டம்:**

PMKUSUM திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற இயலாத விவசாய நிலங்களில் தனிநபர் விவசாயிகளுக்கு சூரிய ஒளி மின் மோட்டார் வழங்கி நிறுவுதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பாதுகாப்பான நிலத்தடி நீர் குறு வட்டங்களில் மட்டும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 3HP முதல் 15HP வரை 60% முதல் 80% வரை மானியத்தில் விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இத்திட்டங்களில் பயன்பெற அருகில் உள்ள வேளாண் பொறியியல் துறை அலுவலகங்களை அணுகலாம்.

வேளாண் பொறியியல் துறை அலுவலகங்களான உதவி செயற்பொறியாளர் (வே.பொ), திருச்சி மெயின் ரோடு, திருக்கோகர்ணம், புதுக்கோட்டை, (கைபேசி எண்: 94421 78763) என்ற அலுவலகத்தையும், உதவி செயற்பொறியாளர் (வே.பொ), நைனா முகமது கல்லூரி அருகில், இராஜேந்திரபுரம், அறந்தாங்கி, (கைபேசி எண்: 63834 26912) என்ற அலுவலகத்தையும், செயற்பொறியாளர் (வே.பொ), திருச்சி மெயின்ரோடு, திருக்கோகர்ணம், புதுக்கோட்டை, தொலைபேசி எண்: 04322 221816 என்ற அலுவலகத்தையும், விவசாயிகள் அணுகி பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai